Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.**23/2021**

Deposition of PW3 Witness forfendce

Defence Court

Name :Raja Case:

Father's Name :Palayam calling:

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the **08st December 2021.**

**முதல் விசாரணை**

நான் கதவு எண்.21, விக்னேஷ் நகர், திருவேற்காடு, சென்னை-77 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். என் தாயார் பெயர் துர்கா ஆகும். வழக்கில் இறந்து போன அஜித் குமார் என் தம்பி ஆவார். என் தம்பி அஜித் குமாரின் மனைவி பெயர் கீர்த்திகா ஆகும். என் தம்பி அஜித் குமாருக்கு, லால், பிரதீப், பிரபா ஆகியோர் நண்பர்கள் ஆவர். என் தம்பி அஜித் குமாரும் லாலும் சிறையிலிருக்கும் போது நண்பர்கள் ஆகியிருக்கிறார்கள். லால் என்பவர் கஞ்சா விற்றுவருவதாகவும் அது சம்பந்தமாக அடிக்கடி தன்னிடம் பிரச்சனை செய்வதாகவும் என் தம்பி அஜித்குமார் என்னிடம் இரண்டு மூன்று முறை கூறியிருக்கிறார். தன்னுடைய பகுதியில் கஞ்சா விற்ககூடாது என்றும் அதனால் இளம்பிள்ளைகள் கெட்டுவிடுகிறார்கள் என்றும் என் தம்பி அஜித்குமார் லாலிடம் கூறியிருக்கிறார். அதனால் லால் என் தம்பியை பார்த்து இதே போன்னு பேசிக்கொண்டிருந்தால் உன்னை எதாவது செய்துவிடுவேன் என்று மிரட்டி இருக்கிறார். சம்பவத்தன்று நான் வேலைக்கு சென்றுவிட்டேன். என்

அம்மாவுக்கு கீர்த்திகா போன் செய்து அஜித்குமாரை லால் வெட்டிவிட்டதாக பிரதீப் ராஜ் சொன்ன தகவலை கூறினார். காலை 8.30 மணிக்கு எங்களுக்கு தகவல் கிடைத்தது. பின்னர் இன்ஜினியர் வந்தவுடன் தகவலை சொல்லிவிட்டு கீர்த்திகாவின் வீட்டிற்கு வந்தோம். அங்கிருந்து நானும், என் அம்மா, கீர்த்திகா மற்றும் பிரதீப் ராஜ் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்றோம். அங்கு சென்று பார்த்தபோது என் தம்பி அஜித் குமார் தலை, முகம், கை ஆகிய இடங்களில் வெட்டுக் காயங்களுடன் இறந்துகிடந்தார். சம்பவம் குறித்து கீர்த்திகா காவல் நிலையத்தில புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**